


# மீட்பின் ஏழு ஸ்வரங்கள்

அ.அல்போன்ஸ்
திருச்சி

## அன்பின் மடல்

# மீட்பின் ஏழு ஸ்வரங்கள்

**அ. அல்போன்ஸ் திருச்சி**

தாய் மரியாளின் துயரங்கள் –
உள்ளதை ஊடுருவிய
ஏழு வாள்களின் காவியம்
மீட்பின் ஏழு ஸ்வரங்கள்.

பெத்லகேமின் தாலாட்டில்,
கல்வாரியின் அழுகை ஒலித்தது,
தொழுவத்தில் தழுவிய கரங்கள்,
சிலுவையில் நடுங்கின.

சிமியோனின் வாள் வந்தது,
எகிப்தின் இரவு வந்தது,
கல்வாரியின் இரத்தம் வந்தது,
மரியாவின் விசுவாசம்
ஆழமானது

ஆலயத்தில் தொடங்கிய மரணப் பயணம்
தொலைந்த குழந்தை இயேசுவை
தேடியத் தவிப்பு
கல்வாரி மலையில் சந்தித்த சோகம்

துயரங்களின் தாய் அவள்—
சிலுவையின் நிழலில்
உயிர்த்தெழுதலைக் கண்ட
விசுவாசத்தின் விடியல்

## முதல் துயரம் – சிமியோனின் வாள்

ஆலயத்தின் நடுவே
ஒலித்த மணியோசை
அன்னையின் கையில்
அழகிய குழந்தை
முதியவர் சிமியோன்
உரைத்த வாக்கு
இரட்சிப்பின் வேதனையை அறிவிக்கும்
சாட்சியம்



உன் இதயம் ஊடுருவும் வாள்
படைத்தவனின் தேவ ரகசியம் பிள்ளை
பெற்ற தாய்க்கு
துன்பமே பரிசு

தாலாட்டுப் பாடலில்
மரணத்தின் நிழல்
பிஞ்சு பாதத்தில் சிலுவையின் ஆணி
அன்னையின் அணைப்பில் உறைந்த
அச்சம்
சிரிக்கும் குழந்தையின் எதிர்காலப் வாழ்வு

குழந்தை கையில் இருந்தது
வாள் இதயத்தில் இறங்கியது
ஆலயம் சாட்சியானது
பலியின் நிழல் பிறந்தது
ஏவாளின் காயத்திற்கு
மரியா பதிலானாள்
ஒருத்தி கீழ்ப்படியாமை

தந்தாள்
மற்றொருத்தி மீட்பைத் தாங்கினாள்.

நெஞ்சில் பதிந்த வாளின் சுமை
தெய்வீகத் திட்டத்தின்
முதல் வியாகுலம்

### இரண்டாம் துயரம் – எகிப்தின் அகதி

இரவில் தூதன் வந்தான்
தொடர்ந்து
ஏரோது வீரன் வந்தான்
பகலில் பயம் வந்தது

குழந்தையைத் தூக்கிக்கொண்டு
தாய் நாட்டைவிட்டு ஓடினாள்



எகிப்து மீண்டும் சாட்சியானது
மோசே நினைவுக்கு வந்தான்
பழைய விடுதலை முடிந்து
புதிய விடுதலை பிறந்தது
கையில் குழந்தை இருந்தது
இதயத்தில் அச்சம் இருந்தது

ஆனால் நம்பிக்கை மட்டும்
அவளை முன்னே நடத்தினது
அரசனின் வாள் தோற்றது
தாயின் கரம் வென்றது
பேரரசின் அதிகாரத்தைவிட
தாயன்பு பலமானது
இன்று அகதிகளின் கண்ணீரில்
மரியாளின் கண்ணீர் தெரிகிறது

சிசுக்களின் குருதி வழியும் வீதிகள்
தாயின் நெஞ்சில் குடையும்
குற்ற உணர்வு
துன்பத்தின் **இரண்டாம் வியாகுலம்.**

### மூன்றாம் துயரம் – ஆலயத்தில் இயேசுவை இழத்தல்

மகன் காணாமல் போனான்
தாய் நகரம் தேடினாள்
மூன்று நாட்கள் நீண்டது
இதயம் கல்லறையானது
ஆலயத்தில் மகன் இருந்தான்
ஆனால் தாய்க்கு தெரியவில்லை
இறைவனின் காரியங்களில்
மனித அன்பு தடுமாறியது
''ஏன் இப்படிச் செய்தாய்?''
தாயின் கேள்வி எழுந்தது
''தந்தையின் காரியம்'' என்றார்
மகனின் சொல் புரியவில்லை



இழந்த மகனைத் தேடினாள்
கண்டபோது மீண்டும் இழந்தாள்
தாய்மையின் உரிமையைவிட
இறைவனின் சித்தம் உயர்ந்தது
மூன்று நாள் தேடல்
மூன்று நாள் கல்லறை
முன்னரே மரியா அனுபவித்தாள்

புரியாத வார்த்தைகளை
இதயத்தில் வைத்தாள்
பதில் கிடைக்காத இடத்தில்
விசுவாசம் பிறந்தது
மூன்று நாள் பிரிவின்
மரண வேதனை
சிலுவைச் சாவுக்கு
முந்திய ஒத்திகை
நெஞ்சில் சுமந்த
மூன்றாம் வியாகுலம்.

## நான்காம் துயரம் – சிலுவைப் பாதையில் சந்திப்பு

சிலுவை தோளில் இருந்தது
தாய் வழியில் நின்றாள்
கண்கள் மட்டும் சந்தித்தன
உலகம் மௌனமானது
மகன் பாரம் சுமந்தான்
தாய் இதயம் கனத்தது
பெத்லகேமின் குழந்தை
கல்வாரியின் குற்றவாளி

சிலுவை அவமானமானது
அதுவே சிம்மாசனமானது
கிரீடம் முள்ளானது
அரசாட்சி இரத்தமானது



இது எத்தனை விசித்திரம்
குற்றமற்றவன் குற்றவாளி
நீதிமான் தண்டிக்கப்படுகிறார்
பாவி விடுதலை பெறுகிறான்
தாயின் கண்களில்
சிலுவை பிரதிபலித்தது
சிலுவையின் இரத்தத்தில்
உலகம் பிரதிபலித்தது
வார்த்தைகள் அற்ற

மௌனக் கதறல்
குருதிச் சுவட்டைத்
தொடரும் பாதம்
நெஞ்சைப் பிளக்கும்
நான்காம் வியாகுலம்.

### ஐந்தாம் துயரம் – சிலுவையின் அடியில்

சிலுவை உயர்ந்தது
தாய் கீழே நின்றாள்
வானம் இருண்டது
இதயம் அழுதது




ஆணிகள் கைகளைக் குத்தின
வாள் இதயத்தைக் குத்தியது
மகன் இரத்தம் சிந்தினார்
தாய் கண்ணீர் சிந்தினாள்
''பெண்ணே, இதோ மகன்''
உலகம் புதியது ஆனது
''இதோ உன் தாய்''
திருச்சபை பிறந்தது
ஏவாள் தோட்டத்தில் விழுந்தாள்
மரியா சிலுவையில் நின்றாள்
ஒருத்தி மரணத்தைத் திறந்தாள்
மற்றொருத்தி வாழ்வைத் தாங்கினாள்

இறைவன் தோற்றதுபோல்
சிலுவையில் தொங்கினார்
உண்மையில் தோல்வியுற்றது
மரணத்தின் அதிகாரம்

எல்லாம் முடிந்தது என்ற குரல்
தாயின் கருவில் உருவான வார்த்தை
சிலுவை மரத்தில்
உயிர் நீத்தது
ஐந்தாம்
வியாகுலத்தின்
கசப்பான உச்சம்.

### ஆறாம் துயரம் – இறந்த இயேசு மடியில்

மீண்டும் மடியில் வந்தார்
ஆனால் குழந்தையாக இல்லை
உயிரற்ற உடலாக வந்தார்
தாயின் இதயம் உடைந்தது
பெத்லகேம் நினைவானது
கல்வாரி உண்மையானது
தாலாட்டு பாடிய கரங்கள்
இப்போது உடலைத் தழுவின



முள்ளின் காயங்கள் பேசின
ஆணிகளின் தடங்கள் பேசின

மௌனமான உதடுகள் மட்டும்
மீட்பை அறிவித்தன
தாயின் மடியில்
உலகத்தின் பலி கிடந்தது
அவளின் கண்ணீரில்
பாவத்தின் விலை தெரிந்தது
ஆபிரகாம் மகனைத் தந்தான்
மரியா மகனை இழந்தாள்
ஈசாக்கு காப்பாற்றப்பட்டான்
இயேசு பலியானார்
தாய் அழுதாள்
ஆனால் நம்பிக்கை இறக்கவில்லை
உடல் குளிர்ந்தது
வாக்குறுதி உயிரோடு இருந்தது

மரியா தழுவிய உடல்
மனிதரின் நம்பிக்கையானது
கண்ணீரில் நனைந்த மடி
ஆறாம் வியாகுலத்தின்
இறுதி உறைவு.

## ஏழாம் துயரம் – கல்லறையில் அடக்கம்

கல்லற வாசலில்
உறைந்த தாய்மை.
அன்னையின்
இதயத்தில் விழுந்த இடி
பிள்ளையை
மண்ணுக்குத் தந்த தாய்
வெற்று கரங்களோடு
நிற்கும் அனாதை
ஏழு வாள்கள் ஊடுருவிய உடல்

கல்லறைப் பாறை
உருண்ட சப்தம்
வியாகுல அன்னையின்
நிறைவுப் படி



கடவுளின் திட்டத்தில்
நடந்த தாய்
கல்லறை தழுவிய
கடைசி முத்தம்.
இரட்சிப்பின் விலை இந்த அடக்கம்

தாயின் தியாகம்
முடிவடைந்த இடம்
மண்ணுக்குள் விதையான
தேவ மைந்தன்
கண்ணீரில் பூக்கும்
உயிர்ப்பு மலர்

ஏழாம் வியாகுலத்தின்
கசப்பான சாட்சியம்.

## முடிவுரை

ஏழு துயரங்கள் வந்தன
ஒரே இதயம் தாங்கியது